**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | |
|---|---|
| Calender : <br> Miscellaneous : <br> Preliminary Register : CC.903/2019 <br> Sessions : <br> Deposition of Witness for : LW-2/PW-5 <br> Name : கல்யாணசுந்தரம் <br> Father's/Husband's Name : திருவேங்கடம் <br> Nationality : Indian | Village: <br> Age :53 <br> Taluk : <br> Religion : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 25.09.2024**

சாட்சியை திருவிடைமருதூர் காவலர் திருமதி. அபிராமி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**எதிரி ஆஜரில் இருந்தார்.**

**<u>முதல் விசாரணை</u>**:

நான் தற்போது சிந்தாமணி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன், ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அசா1 ஐ எனக்கு தெரியும். சுமார் 4,5 வருடங்களுக்கு முன்பு காலை சுமார் 11 மணியளவில் நான் வேலைக்கு சென்றுவிட்டு ஆடுதுறை காளியம்மன் கோவில் அருகே வந்தபோது கணேசும் செந்திலும் சண்டை போட்டு கொண்டிருந்தார்கள். நான் எனது வீட்டிற்கு சென்றுவிட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

போலிசார் என்னை எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் எனக்கு ஞாபகமில்லை. எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் எனது வீட்டிற்கு வந்து விசாரித்தார்கள். விசாரித்த அதிகாரி யார் என்று தெரியுமா என்றால் ஞாபகமில்லை. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளைதான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். யார் யாரை அடித்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2024.09.26 16:48:40 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**